**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**OS No: 114/2020**

2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 07 ம் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**பிசா1 (மல்லிகா) நாள் 07.07.2026**

குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)

கவுண்டியப்ப கவுண்டருக்கு சின்னப்ப கவுண்டர், செல்லப்ப கவுண்டர்,நாராயண கவுண்டர் வாரிசுகள் என்றால் சரிதான். சின்னப்ப கவுண்டருக்கு ராமசாமி மற்றும் ரங்கசாமி என்ற இரு மகன்கள். நாராயண கவுண்டருக்கு சின்னம்மாள், பாப்பாயம்மாள், முத்துசாமி வாரிசுகள் என்றால் சரி. பாப்பாயம்மாள் தான் இந்த வழக்கின் வாதி. செல்லப்ப கவுண்டருக்கு ராமாத்தாள் என்ற மகள் வாரிசு. 1968 ம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினையில் (வாசாஆ 1) கண்டுள்ள சொத்துக்கள் கவுண்டியப்ப கவுண்டருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். வாசாஆ 1ல் கண்டுள்ள சொத்துக்களை கவுண்டியப்ப கவுண்டரின் வாரிசுகள் பாகப்பிரிவினை செய்து கொண்டனர் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை படி சின்னப்ப கவுண்டர் , ராமசாமி மற்றும் ரங்கசாமி ஆகியோருக்கு ஏ செட்டியூல் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரி. நாராயண கவுண்டருக்கும் மற்றும் அவர் மகன் முத்துசாமிக்கு கூட்டாக பி செட்டியூல் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். செல்லப்ப கவுண்டர் மகள் ராமாத்தாளுக்கு சி செட்டியூல் ஒதுக்கப்பட்டது என்றால சரிதான். பாகப்பிரிவினையில் கண்டுள்ள சொத்து நீங்கலாக கவுண்டியப்ப கவுண்டரின் மகன்கள் சின்னப்ப கவுண்டர், செல்லப்ப கவுண்டர் மற்றும் நாராயண கவுண்டருக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. நாராயண கவுண்டரின் மகன் முத்துசாமியின் வாரிசுகள் 3 முதல் 5 பிரதிவாதிகள் என்றால சரிதான். நாராயண கவுண்டரின் மகள் சின்னம்மாளின் வாரிசுகள் தான் 1,2 பிரதிவாதிகள். நாராயண கவுண்டரின் மற்றொரு மகள் பாப்பாயம்மாள் வழக்கின் வாதி. அவர் இறந்து விட்டார்., அவர் வாரிசுகள் தான் 2,3 வாதிகள். தாவா சொத்தில் 2 வீடுகள் உள்ளது. ஒரு வீடு சிமெண்ட் அட்டை போட்டது, மற்றொரு வீடு டார்சு வீடு என்றால்

சரியல்ல. அதுவும் சிமெண்ட அட்டை வீடு தான். தாவா சொத்தில் உள்ள இரு வீடுகளிலும் 4ம் பிரதிவாதி சௌந்தரி குடியிருந்து வருகிறார் என்றால சரிதான். நானும் ராமாத்தாளும் திருமணம் செய்து கொடுத்து கணவர் வீட்டில் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். நாராயணசாமி மற்றும் முத்துசாமிக்கும் இடையே பாகப்பிரிவினை எதுவும் ஏற்பட்டதா என்றால இல்லை,கூட்டாக தான் அனுபவித்து வந்தனர். தாவாவிற்கு பின்னிட்டு பாப்பாயம்மாள் தாவா சொத்து விவரத்தை திருத்தம் செய்துள்ளார் என்றால் எனக்கு ஞாபகமிலலை. பாப்பாயம்மாள் தாக்கல் செய்த திருத்தப்பட்ட வழக்குரையை நான் பார்த்தேனா என்றால் ஞாபகமில்லை. பிசாஆ 2 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை நான், ராமாத்தாள் சௌந்தரம் ஆகியோர் 32 செண்ட் விற்பனை செய்துள்ளோம் என்றால சரிதான். பிசாஆ 2 ல் கண்டுள்ள சொத்து தாவா சொத்தில் சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. 10.02.1999 ல் நான், என் தந்தை மற்றும் ராமாத்தாள், சௌந்தரம் ஆகியோர் விற்பனை செய்துள்ளோம் என்றால் சரி. அந்த சொத்து பூவம்பாளையத்தில் உள்ள வீட்டிடம் என்றால சரிதான். அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. பிசாஆ 5 படி விற்பனை செய்த சொத்து தாவா சொத்தில் சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 2 , 21.03.1938 கிரயப்படி கவுண்டியப்ப கவுண்டரின் மக்களான சின்னப்ப கவுண்டர், நாராயண கவுண்டர் மற்றும் செல்லப்ப கவுண்டர் ஆகியோர் சேர்ந்து ஒரு சொத்தை கிரயம் பெற்றுள்ளனர் என்றால் சரி. அந்த சொத்தின் பழைய சர்வே எண் 21 என்றால் சரிதான். அந்த சொத்து தொடர்பாக செல்லப்ப கவுண்டர் ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் அவ 125/65 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால சரிதான். அந்த வழக்கில் நாராயண கவுண்டர் மற்றும் சின்னப்ப கவுண்டர் தரப்பினர்கள். அந்த வழக்கில் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த இறுதிநிலை தீர்ப்பாணையில் நாராயண கவுண்டருக்கு ஏக்கர் 2.46 ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு நாராயண கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் சின்னப்ப கவுண்டர் மகன் ராமசாமி பிரச்சினை செய்தார் என்றால் சரிதான். அதற்காக என் தகப்பனார் முத்துசாமி ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் அவ எண் 825/1992 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் ராமசாமி மற்றும் அவரை சார்ந்தவர்கள் இடையூறு செய்யக் கூடாது என தீர்ப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். (பிசாஆ 4)மேற்படி தீர்ப்பாணையில் கண்டுள்ள சொத்து விவரங்கள் சரியானது தான். அந்த தீர்ப்பாணையில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தில் கண்டுள்ள ரீசர்வே எண்கள்

சரியானவை தான். அவ எண் 125/65 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இறுதி நிலை தீர்ப்பாணையின் நகல் என்னிடம் உள்ளது. அதை நான் நீதிமன்றததில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. நாராயண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட காடுகளின் பெயர் கூனாங்காடு,பாமரக்காடு, குப்பைகுழி காடு, சில்லாங்காடு மற்றும் தோட்டக்காடு என்றால் சரிதான், இது நீங்கலாக வேறு காடுகளும் உள்ளது. வேறு காடுகள் இருப்பதாக நான் வழககிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ரீசர்வே எண் 426/1 முதல் 6ஏ வரை உள்ள கூனாங்காடு என்றால் சரிதான். ரீசர்வே எண் 427/12 பி , 17 டி, 17 ஜி என்பது பாமரக்காடு என்றால் எனக்கு ஞாபகமில்லை. ரீசர்வே எண் 454/8 என்பது குப்பை குழி காடு என்றால் சரிதான். 444/1,2ஏ,3ஏ மற்றும் 442/1, 2ஏ, 6ஏ மற்றும் 7 ஏ சில்லாங்காடு என்றால் சரிதான். 444/2, மற்றும் 444/5 ல் உள்ளது தான் தோட்டக்காடு என்றால் சரிதான். நாராயண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து 6 ஏக்கர் 17-1/2 சென்ட் என்றால சரியல்ல. அது சுமார் 8 ஏக்கர் இருக்கும். நாராயண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து 8 ஏக்கர் உள்ளது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நாராயண கவுண்டருக்கு ஏக்கர் 6.17-1/2 தான் பாத்தியம் என்றும் 8 ஏக்கர் இருப்பதாக நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால சரியல்ல. அவருக்கு 8 ஏக்கர் இல்லை என்பதால் தான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் நாராயண கவுண்டருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் தாவா சொத்துக்களாக சேர்த்துள்ளனர் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.07.07 15:04:04 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS